செ.வெ.எண்: 51 நாள்:24.10.2016

# பத்திரிகைச்செய்தி

## ஒலி மாசு மற்றும் புகையில்லா தீபாவளியை கொண்டாடுவோம்

தீபாவளியை ஒலி மாசற்ற பண்டிகையாகக் கொண்டாட பொது மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தீபாவளி வாழ்த்து செய்தியில் கூறியுள்ளார்.

தீபாவளியை யாருக்கும் தீமை தராமல் கொண்டாட வேண்டும். வெடியினால் ஏற்படும் தீய விளைவுகளை அனைவரும் உணர வேண்டும். தற்காலிக, நிலையான செவிட்டுத்தன்மை, வெடிகளின் தாக்கமாகும். எனவே, 125 டெசிபல் அளவுக்கு மேல் ஓசையை ஏற்படுத்தும் வெடிகளை வெடிப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

பட்டாசுகளை வெடிக்கும் போது கந்தக-டை-ஆக்சைடு, நைட்ரஜன், நைட்ரஜன் ஆக்சைடு, கன உலோக ஆக்சைடு, மிதக்கும் நுண் துகள்கள் ஆகியவை காற்றில் கலந்து சுற்றுச்சூழல் மாசுபடுகிறது. இதனால் கண் எரிச்சல், ஒவ்வாமை, சுவாசக்கோளாறு, நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி இரவு 10.00 மணி முதல் காலை 6.00 மணி வரை ஒலி எழுப்பும் பட்டாசுகளை வெடிப்பதைக் தவிர்க்க வேண்டும். இந்த நேரத்தில் ஒளி மற்றும் வண்ணங்களை ஏற்படுத்தும் மத்தாப்புகளை வெடிக்கலாம்.

போக்குவரத்து அதிகமுள்ள சாலைகள், நெரிசல் மிக்க இடங்களில் வெடிகள் வெடிக்க வேண்டாம். மருத்துவமனைகள், பள்ளிகள், நீதிமன்றங்கள் போன்ற அமைதிப்பகுதிகளில் வெடிகளை வெடிக்கக் கூடாது. குடிசைகள், எளிதில் தீப்பற்றும் பொருட்கள் இருக்கும் இடங்களில் ராக்கெட் வெடிகள் போன்றவற்றை வெடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

மாண்புமிகு உச்சநீதி மன்றத்தின் அறிவுரையைப் பின்பற்றி பட்டாசு குறித்து உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் பொது மக்கள் கடைபிடிக்க வேண்டிய முக்கிய விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

### விற்பனையாளர்கள் கடைபிடிக்கப்பட வேண்டியவை:

1.விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படும் பட்டாசுகளின் வகைகள், ஒவ்வொரு பட்டாசுகளில் அடங்கியுள்ள வேதிப்பொருட்கள் அவற்றின் அளவுகள் மற்றும் அதனை வெடிக்கும் பொழுது அவை ஏற்படுத்தும் ஒலி மாசு அளவுகள் பற்றிய விவரங்கள் தெரிவிக்க வேண்டும்.

2. அதிகபட்ச ஒலி அளவான 125 டெசிபல் மேல் ஏற்படுத்தும் எநத ஒரு பட்டாசும் விற்பனை செய்யக்கூடாது.

### பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டியவை:

1. இரவு 10.00 மணி முதல் காலை 6.00 மணி வரை ஒலி எழுப்பக்கூடிய பட்டாசுகளை கண்டிப்பாக வெடிக்கக் கூடாது.

2. மாண்புமிகு உச்ச நீதிமன்ற விதிமுறைகளை கடைப்பிடிக்காமல் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யப்படும் பட்டாசுகளை வாங்கக் கூடாது.

"ஒளித்திருநாளான தீபாவளி பண்டிகையை" ஒலி மாசை ஏற்படுத்துகின்ற பட்டாசுகளைத் தவிர்த்து வண்ணமிகு ஒளி ஏற்படுத்தும் பட்டாசுகளை குறைந்த அளவில் உபயோகித்து வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடி சுற்றுச்சூழலைக் காப்போம்.

"ஒளிப்பண்டிகையான தீபாவளியை ஒலி மாசற்ற பண்டிகையாக" உங்கள் அனைவருடைய ஒத்துழைப்போடு கொண்டாடுவோம்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**